**முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், திருநெல்வேலி**

முன்னிலை : **திரு.R.M.மாரிமுத்து, B.A., B.L., L.L.M.,**

முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி,

திருநெல்வேலி

2025ம் ஆண்டு செப்டம்பர் மாதம் 01ம் நாள் திங்கட்கிழமை

**இ.பி.எண்.46/2024 அதன் அ.வ.எண்.215/2020**

வெங்கடேசன் ... மனுதாரர்/வாதி

/எதிர்/

கண்ணையன் ... எதிர்மனுதாரர்/ பிரதிவாதி

இந்த மனுவானது 01.09.2025 அன்று இந்நீதிமன்றத்தின் முன்பு இறுதியாக விசாரணைக்கு வந்த போது, மனுதாரர் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.S.B.கமலநாதன் அவர்கள் ஆஜராகியும், எதிர்மனுதாரர் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.S.வெங்கடேஷ்வரமூர்த்தி அவர்கள் ஆஜராகியும், இரு தரப்பு வாதங்களைக் கேட்டும் மற்றும் இரு தரப்பு ஆவணங்களை பரிசீலனை செய்தும் இன்று வரை இந்நீதிமன்ற ஆய்விலிருந்தும் இன்று இந்நீதிமன்றம் பிறப்பிக்கும்.....

**உத்தரவு**

நிறைவேற்றுகை மனுவானது, எதிர்மனுதாரர் மனு 2வது தபசில் சொத்தில் செய்திருக்கும் 3வது தபசில் ஆக்கிரமிப்புகளை அகற்ற உத்தரவிடக் கோரியும், தவறினால் நீதிமன்றமே அகற்றி தர உத்தரவு பிறப்பிக்கக் கோரியும் உரிமையியல் நடைமுறைச் சட்டம் கட்டளை 21 விதி 32 மற்றும் பிரிவு 151– ன் கீழ் மனுதாரரால் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**<u>2). மனுவின் சுருக்கம்</u>**

மனுவின் எதிர்மனுதாரர் மீது நிரந்தர உறுத்துக் கட்டளை மற்றும் சுவாதீனப் பரிகாரம் கோரி 1வது கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம் திருநெல்வேலியில் தாக்கல் செய்த அ.வ.எண்.215/2020 என்ற மேற்படி வழக்கானது விசாரணைக்கு பின்பு 13.03.2024ம் தேதி தீர்ப்பும், தீர்ப்பாணையும் பிறப்பிக்கப்பட்டுள்ளது என்றும், எனவே, மேற்படி தீர்ப்பு மற்றும் தீர்ப்பாணையின் அடிப்படையில் மனு 2வது தபசில் சொத்தில் எதிர்மனுதாரர் செய்திருக்கும் 3வது தபசில் ஆக்கிரமிப்புகளை அகற்ற உத்தரவிட வேண்டி மனுதாரர் இம்மனுவை தாக்கல் செய்துள்ளார்.

**<u>3) எதிருரை சுருக்கம்</u>**

மனுதாரர் மனு தாக்கல் செய்துள்ள மனு சட்டப்படிக்கும், நியாயப்படிக்கும் செல்லத்தக்கதல்ல என்றும், அசல் வழக்கில் பிறப்பிக்கப்பட்ட தீர்ப்பாணைக்கு எதிராக எதிர்மனுதாரர் மாண்புமிகு முதன்மை சார்பு நீதிமன்றம், திருநெல்வேலியில் ஏ.எஸ்.எண்.29/2024 தாக்கல் செய்யப்பட்டு நிலுவையில் இருந்து வருகிறது என்றும், நிறைவேற்றுகை மனுவில் மேற்படி மேல்முறையீடானது நிலுவையில் உள்ளது என்ற விபரத்தை குறிப்பிடவில்லை என்றும், மேற்படி மேல்முறையீட்டில் எதிர்மனுதாரர் தடையாணை மனு இ.ம.எண்.1/2024 தாக்கல் செய்து நிலுவையில் இருந்து வருகிறது என்றும், மேற்படி மேல்முறையீட்டில் எதிர்மனுதாரருக்கு நல்ல கட்சி உள்ளது என்றும், மனுதாரர் வேண்டுமென்றே இந்த எதிர்மனுதாரரை கஷ்ட, நஷ்டப்படுத்த வேண்டி இம்மனுவை தாக்கல் செய்துள்ளார் என்றும், எனவே, இந்த மனுவை தள்ளுபடி செய்ய வேண்டுமென்று கூறப்பட்டுள்ளது.

4). இரு தரப்பிலும் சாட்சிகள் விசாரிக்கப்படவில்லை. இரு தரப்பிலும் சான்றாவணங்கள் எதுவும் முன்னிறுத்தவில்லை.

5). **<u>இம்மனுவில் தீர்மானிக்கப்பட வேண்டிய பிரச்சனை யாதெனில் இம்மனு அனுமதிக்கத்தக்கதா? இல்லையா? என்பதேயாகும்.</u>**

6). இரு தரப்பு வாதுரை கேட்கப்பட்டது. இரு தரப்பு ஆவணங்கள் பரிசீலிக்கப்பட்டன. மனுதாரர் தரப்பில், அசல் வழக்கானது நிரந்தர உறுத்துக் கட்டளை மற்றும் சுவாதீனப் பரிகாரம் கோரி 1வது கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், திருநெல்வேலியில் தாக்கல் செய்த அ.வ.எண்.215/2020ல், கடந்த 13.03.2024ம் தேதி மனுதாரருக்கு ஆதரவாக தீர்ப்புரை மற்றும் தீர்ப்பாணை பிறப்பிக்கப்பட்டுள்ளது என்பது தெரிய வருகிறது.

7) இந்த மனுதாரர் தாக்கல் செய்த அ.வ.எண்.215/2020ல், கடந்த 13.03.2024ம் தேதி தீர்ப்புரை மற்றும் தீர்ப்பாணை பிறப்பிக்கப்பட்டுள்ளது என்பது இரு தரப்பிலும் ஒத்துக் கொள்ளப்பட்ட சங்கதியாகும். இந்நிலையில், மேற்படி மனு சங்கதிகளை மறுத்து எதிர்மனுதாரர் ஆட்சேபணை தெரிவித்து எதிருரை தாக்கல் செய்யப்பட்டுள்ள நிலையில், அதற்கான ஆவணங்கள் எதுவும் இந்நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்தவில்லை. மேலும், நிறைவேற்றுதல் மனுவை மேல் நடத்த தடையாணை எதுவும் மேல்முறையீட்டு நீதிமன்றங்கள் எதுவும் பிறப்பிக்கவில்லை என்பதை அறிய முடிகிறது. எதிர்மனுதாரர் தரப்பில் மாண்புமிகு முதன்மை சார்பு நீதிமன்றத்தில் ஏ.எஸ்.எண்.29/2024 ஆக அசல் வழக்கின் மேல்முறையீடு நிலுவையில் இருந்து வருகிறது என கூறப்பட்டது. இருந்த போதிலும், மேற்படி மேல்முறையீட்டில், இந்த நிறைவேற்றுகை மனுவை மேல்நடத்துவதற்கு தடை உத்தரவு எதுவும் பிறப்பிக்கப்படவில்லை என்பது தெரியவருகிறது.

8) எனவே, நிறைவேற்றுதல் நீதிமன்றமான இந்நீதிமன்றத்திற்கு மேல்முறையீட்டு நீதிமன்றங்களால் அசல் வழக்கில் பிறப்பிக்கப்பட்ட தீர்ப்பாணையை நிறைவேற்ற எந்தவிதமான தடையாணையும் பிறப்பிக்கப்படவில்லை என்பதாலும், எதிர்மனுதாரர் அசல் வழக்கில்

பிறப்பிக்கப்பட்ட நீதிமன்ற உத்தரவிற்கு இணங்க செயல்படாமல் இருந்து வருகிறார் என்பதாலும், நிறைவேற்றுதல் நீதிமன்றமான இந்நீதிமன்றம் அ.வ.எண்.215/2020–ல் பிறப்பிக்கப்பட்ட தீர்ப்பாணைக்கு இணங்க மனு 2 வது தபசில் சொத்தில் எதிர்மனுதாரர் ஏற்படுத்தியிருக்கும் 3 வது தபசில் சொத்தின் ஆக்கிரமிப்புகளை அகற்றி, மனுதாரரிடம் கொடுக்க வேண்டிய பொறுப்பு இந்த நீதிமன்றத்திற்கு உள்ளது. அவ்வாறு மனு 2 வது தபசில் சொத்தில் எதிர்மனுதாரர் ஏற்படுத்தியிருக்கும் 3 வது தபசில் ஆக்கிரமிப்பை அகற்றி மனுதாரரிடம் வாழ்விப்பு செய்து கொடுப்பது தான் நீதியின் நலனுக்கும் சிறந்ததாக இருக்கும் என்று இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது.

**இறுதியில், இம்மனு செலவு தொகையுடன் அனுமதிக்கப்படுகிறது. Delivery Batta in a week. Delivery on or before 22.09.2025. Call on 23.09.2025.**

என்னால் சுருக்கெழுத்தருக்கு நேரடியாக சொல்லப்பட்டு, அவரால் கணினியில் நேரடியாக தட்டச்சு செய்யப்பட்டு, பின்னர் என்னால் பிழை நீக்கம் செய்யப்பட்டு, 2025 ம் ஆண்டு செப்டம்பர் திங்கள் 01 ம் நாளாகிய இன்று என்னால் திறந்த இந்நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

MARIMUTHU R MUNIYASAMY

Order uploaded on 01.09.2025
Digitally signed by MARIMUTHU R MUNIYASAMY
Date: 2025.09.01 18:16:34 +0530

முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி,
திருநெல்வேலி.

1). மனுதாரர் தரப்பு சாட்சிகள், சான்றாவணங்கள் : இல்லை
3). எதிர்மனுதாரர் தரப்பு, சான்றாவணங்கள் : இல்லை

MARIMUTHU R MUNIYASAMY

Order uploaded on 01.09.2025
Digitally signed by MARIMUTHU R MUNIYASAMY
Date: 2025.09.01 18:16:51 +0530

முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி,
திருநெல்வேலி.

முு.மா.உ.நீ, திருநெல்வேலி.
இ.பி.எண்.46/2024
**அதன்**
அ.வ.எண்.215/2020
வரைவு/சீரான உத்தரவு
நாள் – 01.09.2025.